மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
வத்திராயிருப்பு

**அசல் வழக்கு எண். 4/2024**

வா.சா. 2 பாண்டி, S/o. ராமையா

நாள்: 08.06.2026

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

<u>1 மற்றும் 2 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

**1)** நான் என்ன படித்துள்ளேன் என்றால் படிக்கவில்லை. சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றும் மலைச்சாமி என்பவர் அழைத்ததன் பெயரில் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். சின்னச்சாமி மற்றும் மலைச்சாமி எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சொத்து பிரச்சனை சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விபரத்தை நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்று சொன்னால் என்னுடைய வழக்கறிஞர் படித்துக் காண்பித்தார் நான் படித்து பார்க்கவில்லை.

2) நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் மலைச்சாமியின் வழக்கறிஞர் சொல்லித்தான் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து தான். நான் நிலத்தரகர் இல்லை என்று

சொன்னால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளானது ஒரு சென்ட் நிலமானது ரூபாய் 8,600/– என்று சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் எனக்கு வழக்கறிஞர் சொல்லித்தான் தெரியும் என்று சொன்னால் சரியல்ல நானும் வாதி கிரையம் வாங்கிய இடத்துக்கு அருகில் அதே தொகைக்கு கிரையம் வாங்கியதால் தான் எனக்கு தெரியும்.

3) கிரைய தொகை குறித்து வாதியும் கிரையதாரரும் எங்கே வைத்து பேசி கொண்டார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் வாதிகளை சுமார் 15 வருடங்களுக்கு மேலாக தெரியும் என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் எந்த வருடத்தில் எழுதப்பட்டது என்று சொன்னால் எனக்கு அது குறித்து சரியாக ஞாபகம் இல்லை. 18.01.2008 அன்று வா.சா.ஆ.1 ஆவணம் எழுதப்பட்டதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் எனக்கு படிக்கத் தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணமானது எழுதப்பட்டு சுமார் 18 வருடங்கள் ஆகிறது என்றும், ஆனால் நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் வாதிகளை 15 வருடங்களாக தெரியும் என்று சொல்லியுள்ள நிலையில் 15 வருடங்கள் தான் எனக்கு தெரியுமா என்றால் அதற்கு முன்பு எனக்கு தெரியுமா என்றால் அதற்கு முன்பு இருந்தே எனக்கு தெரியும்.

4) 2008 வருட காலகட்டத்தில் சின்னச்சாமி எங்கே குடியிருந்து வந்தார் என்றால் கோயம்புத்தூரில் குடியிருந்து வந்தார். கிரைய ஒப்பந்த ஆவணம் எழுதிக் கொண்ட அதே தேதியில் தான் முத்திரைத்தாளிலும் எழுதிக் கொண்டார்கள் என்று சொன்னால் ஒரு சிறிய நோட்டிலும் எழுதிக்

கொண்டார்கள். வெள்ளை தாளிலும் ரூ.20/- முத்திரைத்தாளிலும் எழுதிக் கொண்டார்கள். ஆவணம் எழுதுவதற்காக முத்திரைத்தாள் யார் வாங்கி வந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சின்னச்சாமி வாங்கி வந்தார். முத்திரைத்தாள் வாங்குவதற்காக நானும் சின்னச்சாமியுடன் சென்றேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளான சின்னசாமி முத்திரைத்தாள் விற்பனை செய்பவரிடம் முத்திரைத்தாள் வாங்கி வந்த விவரம் தெரியும் என்று சொல்லியுள்ள சங்கதிகள் வழக்கறிஞர் சொல்லித்தான் எனக்கு தெரியும் என்று சொன்னால் நானும் உடன் இருந்ததால் எனக்கு தெரியும்.

5) முத்திரைத்தாள் விற்பனை செய்யப்பட்ட தேதியானது 15.12.2007 என்றும் கிரைய ஒப்பந்த ஆவணம் எழுதிக் கொண்ட தேதியானது 18.01.2008 என்றும் எழுதப்பட்டுள்ள நிலையில் எது உண்மை என்று சொன்னால் எனக்கு அது குறித்து தெரியாது. 18.01.2008 அன்று கிரைய ஒப்பந்த ஆவணம் எழுதப்பட்ட விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தை தயார் செய்தது யார் என்றால் ஆறுமுகம் என்பவர் தயார் செய்தார். பத்திர எழுத்தர் ஆறுமுகம் என்பவரின் கையெழுத்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் என்னுடன் கையெழுத்து செய்த மற்றொரு சாட்சி கையெழுத்து யாருடையது என்றால் கருப்பையா என்பவரின் கையெழுத்து.

6) சாட்சி மலைச்சாமி கிரைய தொகையை கிரைய ஒப்பந்த ஆவணம் எழுதிக் கொண்ட அன்றைய தினம் கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் நான் கிரைய ஒப்பந்த ஆவணம் எழுதிக் கொள்வதற்கு முன்பே கிரையத்தொகை கொடுத்துவிட்டதாக சாட்சியம் அளித்துள்ள நிலையில்

எது உண்மை என்று கேட்டால் கிரைய ஒப்பந்த ஆவணம் எழுதிக் கொள்வதற்கு முன்பு கிரைய தொகை கொடுத்துவிட்டார்கள் என்பதுதான் உண்மை. வா.சா.ஆ.1 ஆவணமானது பிச்சைமுத்து மற்றும் மலைச்சாமி ஆகியோர்களால் ஏற்படுத்தப்படவில்லை என்றும் மோசடியாக ஏற்படுத்தப்பட்டு 1 மற்றும் 2 பிரதிவாதிகளிடமிருந்து சொத்தை அபகரிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் மோசடியாக நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**3 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் யாரும் ஆஜர் இல்லை. நீதியின் நலனை கருத்தில் கொண்டு 3 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு